# என்.ஜி.எம். கல்லூரி

பொள்ளாச்சி

# உலகளாவிய விழுமியங்கள்



மனிதவள மாண்புத் துறை

# பொருளடக்கம்


1. இனப்பாகுபாடும் தீர்வும் ... 7

2. சுற்றுச்சூழல் பாதிப்பும் அதன் தீர்வும் ... 13

3. அரசியல் கொந்தளிப்பும் தீர்வும் ... 22

4. உலகை அச்சுறுத்தும் தீவிரவாதமும் தீர்வும் ... 26

5. கலாச்சார சீரழிவும் தீர்வும் ... 32

6. ஒருமித்த கலாச்சார விளைவும் தீர்வும் ... 38

7. பொருளாதாரப் பாகுபாடுகளும் தீர்வுகளும் ... 47

8. செயலும் மனிதனே தீர்வும் மனிதனே ... 54

9. தவம் ... 58

10. முத்திரைப் பயிற்சிகள் ... 62

# 5. கலாச்சார சீரழிவும் தீர்வும்

முனைவர் **பொ.மா. பழனிசாமி**
தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

**முன்னுரை :**

'அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லாதவர்' (குறள் - 997)

கூர்மையான அரத்தைப் போன்று கூர்ந்த அறிவை ஒருவர் பெற்றிருந்தாலும், மானிடப் பண்புணர்வினைக் கொண்டிருக்கா விட்டால் அவர் மரத்திற்கு ஒப்பாவார். ஏனெனில் மானிடவியல் பண்புணர்வே மனிதனை மனிதனாக இருக்கச் செய்யவும், அவன் வாழ்வைச் செம்மைப்படுத்தவும் வழி வகுக்கின்றது.

கோடிக்கணக்கான எண்ணத்துகள்கள் கொட்டிச் சிதறும் இடம் மானிட மனமே. தெளிந்த நீரோடையாக இருக்க வேண்டிய மனித மனத்தில் சமுதாயச் சூழல் நிமித்தம் தீய எண்ணங்கள் என்ற அசுத்தங்கள் கலக்கின்றன. அதை அசுத்தங்கள் என்று அடையாளம் கண்ட மானிட மனங்கள் 'பண்பாடு' என்ற சுத்திகரிப்புக் கருவி மூலம் நீக்குகின்றன; சில மனங்கள் நீக்க முயல்கின்றன. சில மனங்கள் நீக்க இயலாமல் தவிக்கின்றன.

கலாச்சாரத்தில் யாருக்கு அதிக முக்கியத்தவம் இருக்கிறது? தனி மனிதனுக்கா? அல்லது சமுதாயத்திற்கா? சமுதாயத்திற்காகத்தான் தனி மனிதன் இருக்கிறான். ஏனென்றால் தனிமனிதன் அழிந்த போதிலும் சமுதாயத்தில் என்றும் அழிவுறாமல் தொடர்ந்து இருந்து வருவது இந்தக் கலாச்சாரம் தான்.

**கலாச்சாரத்தின் பொருள் விளக்கம்**

கலாச்சாரம் = கலை+ ஆச்சாரம்

மனிதனுடைய வாழ்க்கையே 'கலைதான்', மனிதன் தன் கைத்திறனாலும், அறிவின் உயர்வாலும் இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றியமைத்துதான் வாழ்க்கையே நடத்துகிறான். ஆகையினாலேயே அந்தக் கலையையே வாழ்க்கையாகக் கொண்ட மனிதனுக்கு ''ஆச்சாரம்'' அவசியம்.

எந்தச் செயல் செய்தாலும் தன்க்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ, பிற்காலத்திலோ அறிவுக்கோ, உடல் உணர்ச்சிக்கோ துன்பம் எழாத அளவோடும், முறையோடும் ஆற்றிப் பழகி செய்யக் கூடிய செயல் நெறிதான் **ஆச்சாரம்**. ஆகவே துன்பம் வராது இருக்க வேண்டுமென்றால் இயற்கையைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படி தெரிந்து கொண்டால் அப்பொழுதான் அளவு முறை, இரண்டும் தெரிந்து செயலாற்றி வாழ முடியும்.

## கலாச்சார சீரழிவிற்கான அடிப்படைக் காரணிகள்

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பதற்கேற்ப மனிதன் தானே தவறான செயல்களைச் செய்துப் பெரும் துன்பத்திற்கு ஆளாகிறான். மிக உயர்ந்த எக்காலத்திற்கும் ஏற்றமளிக்கும் நம்முடைய பண்டைய பாரம்பரியமிக்க பண்பாட்டுக் கல்வியை கல்வி முறையிலிருந்து நீக்கி விட்டதுடன், சுதந்திரம் பெற்றப் பின்னரும் அக்கல்வியினை நாம் மீண்டும் கல்விமுறையில் கொண்டு வர முயற்சி செய்யவில்லை. இவ்வாறானச் சீர்திருத்தங்களை செயல்படுத்த வேண்டிய அரசுகளின் மெத்தனப் போக்கும் கலாச்சாரத்தின் சீரழிவிற்கான காரணிகளாகின்றன.

1. மது அருந்துதல், புகைபிடித்தல்
2. பால் உணர்வை தூண்டிவிடும் புகைப்படங்கள்
3. பத்திரிக்கைகளில் உள்ள தவறான விஷயத்தை படிப்பது.
4. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் ஒளிபரப்பாகும் சமுதாயத்தில் தனிமனிதனின் உள்ளத்தில் தீயபாதைகளில் செல்லத் தூண்டும் தொடர்நிகழ்ச்சிகள் மற்றும் கதைகள்
5. சமுதாய வளர்ச்சியில் பங்கு கொள்ளும் பெரியோர்களை அறவே வெறுத்து ஒதுக்குவது
6. மேனாட்டு கலாச்சார மோகத்தில் கவரப்பட்டு, வாழ்க்கை நெறிகள் மற்றும் பண்பாடுகளைப் பின்பற்றாது வாழ்வது.

## 'பண்பாடு' விளக்கம்

செம்மைப்படுத்தப்பட்ட மானிட உணர்வே 'பண்பாடு' என்ற சொல்லின் பொருள் ஆகும்.

'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல்' (133)

என்ற கலித் தொகைப்பாடலுக்கு நச்சினார்க்கினியர் உரை வகுக்கும் போது **'எல்லோருடைய இயல்புகளையும் அறிந்து, ஒத்து, நன்னெறியில் ஒழுகுதலே பண்பு' என்பார்.**

பேராசிரியர் வையாபுரிபிள்ளை, ' மக்களது அறிவு நலம், கருத்து நலம், குண நலம் கொள்கை நலம். ஒழுக்க நலம், வாழ்க்கை நலம் முதலியன மேன்மேலும் திருந்திவரும் நிலையே பண்பாடு' என்பர்.

இவ்வாறு அறிஞர்கள் பலர் பல விளக்கங்களைப் பண்பாட்டிற்குக் கூறினாலும் அடிப்படைக் கருத்து குணநலம் என்ற ஒன்றுதான்.

**நாகரிகம் – பண்பாடு**

நாகரிகம் (Civilization) என்பது மானிடத்தின் புறத் தோற்றத்தையும், பண்பாடு (Culture) என்பது மானிடத்தின் அகத் தோற்றத்தையும் விளக்கிக்கூறும் சொற்களாகும்.

மானிடத்தின் புறத்தோற்றமாக உணவு, உடை, உறையுள், தொழில், கருவி, கலை சமுதாய அமைப்புப் போன்றனவும், அகத் தோற்றமாக காதல், வீரம், கொடை, அன்பு, அருள், அறம், ஒழுக்கம், கடமை முதலியனவும் அமைகின்றன.

நாகரிகம் என்பது 'வெளித்தோற்றத்தையும், மரபு வழி இயக்கத்தையும் உணர்த்துவது ஆகும். (Civilization is External and Mechanical While Culture is internal and organic).

**அக்கால பண்பாடு**

ஒழுக்கமுள்ளவர்களே உயர்ந்தவர்கள் என்பது மானுட சமூகத்தின் உயிர்க்கொள்கை. ஒருவனுக்கு ஒருத்தி. ஒருத்திக்கு ஒருவன் என்பதற்கு இலக்கியமாக '' இந்த பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்''(கம்பராமா. சுந்தர - சூளாமணி-43) என்று இராமன் சீதைக்குத் தந்த செவ்வரம் மானுடசமூகத்தை உயர்த்தும் உயர்வரம்.

கணவனும் மனைவியும் ஒருங்கிணந்து செல்வது தான் குடும்ப வாழ்க்கையின் உன்னதம் . இதைக் குறுந்தொகை.

'' இம்மை மாறி வறுமை யாயினும்
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே'' ( நெய் - 39)

இப்பிறப்பில் மட்டுமல்ல மறுபிறப்பிலும் தான் மணந்த தலைவனே தனக்குக் கணவனாக அமைய வேண்டும் எனத் தலைவி கூற்றாகக் கூறுகிறது.

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அது இன்றேல்
மண்புக்கு மாய்வது மன் - குறள் (996)

பண்புடையவர்கள் உள்ளதால், உலகம் இயங்குகின்றது அவர்கள் இல்லை என்றால், உலகம் மண்ணுக்குள் மறைந்துவிடும்.

## மண்ணின் வழி வெளிப்படும் பண்பாடு

மண்தரத்தால் ஐந்தாக (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) உள்ளது போல் மானிடர்களும் அவர்களின் தன்மையால் பலவகையாக உள்ளனர். எதனையும் பொறுமையுடன் தாங்கும் நிலம் போல மானிடர்களும் பொறுமையின் சின்னமாக விளங்க வேண்டும். நிலத்தோடு நீர் சேர்ந்து உலகைச் செழிக்கச் செய்வது போல், கணவனும் மனைவியும் இணைந்து இல்லற வாழ்வைச் செழிக்க செய்ய வேண்டும்.

'' நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'' (புறம்)

என்ற புறநானூற்றுப் பாடல் மானிடர்கள் நல்லவர்களாக இருக்கும் இடம் நல்ல இடமாகப் பெயர் பெறுகிறது என விளக்கம் தருகின்றது.

## தற்காலப் பண்பாடு

ஆண்களிடமும் பெண்களிடமும் பண்பாட்டுக் குறைபாடுகள் இல்லாமல் இல்லை. பொதுவாக பண்பாட்டுக் குறைவுடைய சிந்தனையோட்டத்தோடு இன்றைய சமூகம் உலவிக் கொண்டுள்ளது.

இன்று பொதுவாக, மேல்நாட்டு நாகரிகம், பண்பாடு நம்மவர்களையும் ஆட்டிப்படைக்கின்றன. போலி நாகரிகங்கள் பெருகி வருகின்றன.

எனவே இதையறிந்த நல்லுள்ளங்கள் சில, கவலையில் ஆழ்ந்துள்ளன. மன உறுதியல்லாத நிலையில் மனிதன் கிடைக்காத பொருளைத் தேடி தேடாத பொருளைப் பெற்று வாழ்கிறான்.

'' வாழ்க்கையின் முதற்பகுதியில் வெற்றி பெறுவதற்குத் தேவையானவை சுறுசுறுப்பும் ஊக்கமும்; பிற்பகுதியில் வெற்றி பெறத் தேவையானவை அடக்கமும், பொறுமையும்' என்பார் அரிஸ்டாட்டில்.

எனவே சுறுசுறுப்பும், ஊக்கமும் உள்ள காலத்தில் பாலுணர்ச்சியைத் தூண்டக்கூடிய திரைப்படங்களை, நூல்களைப் பார்ப்பதிலும், படிப்பதிலும் இளைய உள்ளங்கள் ஈடுபட்டால் வெற்றி என்பது கானல் நீரே.

## பண்பாடு வெற்றி பெற வழி

'' உங்களைக் காட்டிலும் கெட்டிக்காரர்கள் உங்களைச் சுற்றி இருக்க வேண்டும் அல்லது நீங்கள் அவர்களைச் சுற்றி இருக்க வேண்டும். அது தான் வெற்றிக்கு வழி'' என்பார் பாங்க்கில்.

எனவே ஒவ்வொரு மானிடனும் கடமைகளை, பொறுப்புகளை முறைப்படி மன ஈடுபாட்டோடு செம்மையாகச் செய்து முடிப்பானாயின் பண்பாடு நிலைத்து வாழும்.

மானிட சமுதாயத்தில் பண்பாடு வளர அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும். நான், எனது என்ற நிலை மாறி நாம், எமது என்ற நிலை உருவானால் சமநிலை மனப்பான்மை வளரும், வாழும்.

''உண்மையான உழைப்பின் துணைகொண்டு நியாயமாக கிடைப்பதை நன்றாக அனுபவிக்கும் மனோபாவத்தை வளர்த்துக் கொண்டவனுடைய வாழ்க்கையே சுவையுள்ளதாக இருக்கும்'' என்பார் ஆதிசங்கராச்சாரியார்.

''மேகங்கள் எவ்வளவு தான் பெரியனவாக இருந்த போதிலும் அதனால் சூரியனை மறைத்து விட முடியாது. அதே போல் கயவர்கள் எவ்வளவு தான் முயன்றாலும் சிறந்த திறமைசாலிகளின் முன்னேற்றத்தை தவிர்த்துவிட முடியாது.'' என்பார் தாகூர்.

'Work more talk less' என்று மானிடம் எப்பொழுது எண்ணுகிறதோ அன்றே முன்னேற்றம் ஏற்படும்.

## கலாச்சார சீரழிவிற்கான தீர்வுகள்

மனிதன் தன் வாழ்வில் கைக் கொள்ள வேண்டிய பண்பாட்டுக் கூறுகளாவன: பெருமையும், ஆற்றலையும் செயல்பாட்டில் கொண்டு விளங்குதல். பழி பாவங்களுக்கு அஞ்சும் ஞான உணர்வு கொள்ளுதல், தீய வழியில் பெரும் பொருளீட்டும் எண்ணம் கொள்ளாமலிருத்தல், பிறர் வாழத் தாம் வாழ வேண்டும் என்று எண்ணுதல்.

வலியோர் எளியோரை அடக்கியாள முற்படாமல், உற்ற துணையாக இருத்தல். செம்மையான வாழ்வுக்குப் போதுமான பொருளை எடுத்துக் கொண்டு மிகுதியைத் திறம் வாய்ந்த உழைப்பாளிக்கு ஊக்கத் தொகையாகக் கொடுத்து சமுதாய வளர்ச்சிக்கு வழிகோலலாம். இரு பாலரும் கற்பை உயிரினும் மேலாகக் கருதி வாழ்தல், வரவுக் கேற்ற செலவினையே செய்து செம்மை வாழ்வு வாழ்தல், ஆட்சியாளர்கள் காட்சிக்கு எளியவர்களாகவும்,நேர்மை திறம் உடையவர்களாகவும் விளங்குதல்.

நேரிய பண்பாளருக்குத் துன்பம்வரின் உயிரையும் தந்து காத்தல், செய்யும் தொழிலை தெய்வமாக மதித்தல், நீதிநெறியை வழுவாமல் காத்தல், உண்மை, நேர்மை, வழியிலிருந்து தவறாமை, பழியில்லாத புகழை மனமுவந்து ஏற்றுக் கொள்ளல்.

உலக மக்கள் யாவரும் என் உடன்பிறப்புகளே என்ற பொது மன நிலையுடனிருத்தல். வருமுன் காக்கும் முக்கால ஆராய்ச்சி அறிவுடனிருத்தல்.

மாசிலன்பு, ஐம்புலனடக்கம், விருப்பு, வெறுப்பற்ற ஆராய்ச்சி மனம், பிறர் மனை நோக்கா பேராண்மை, பிறர்மனம் நோகாத அறச்செயல், நல்நாணம், வாய்மை, நேர்மை, தூய்மை, பணிவு போன்ற பண்புகளை மனிதன் வேலியாகக் கொண்டு வாழ்தல் கலாச்சார சீரழிவிற்கான தீர்வாகும்.

தன் அறிவிற்கும், அனுபவத்திற்கும், தகுதிக்கும், பொருளாதார நிலைக்கும் அப்பாற்பட்ட செயல்களை ஒரு பொழுதும் செய்யாமல் இருத்தல் வேண்டும். தன்னை விட அறிவிலும், அனுபவத்திலும், தகுதியிலும் சிறந்தோரிடையே எதையும் தேவை இல்லாமல் முந்திச் சென்று சொல்லாத நாவடக்கம் கொள்ளுதல் வேண்டும்.

**நிறைவுரை**

மானிடப் பிறவிகள் தம் குணங்களை ஆராய்ந்து பிறகு குற்றங்களையும் ஆராய்ந்து, மிகுதியானவை எவையென ஆராய்ந்து மிகுந்திருப்பவற்றால், குணமுள்ள பிறவியா, குற்றமுள்ள பிறவியா என அடையாளம் கண்டு கொள்ளலாம்.

எனவே மானிட வாழ்வியலில் பண்பாட்டியல் கூறுகள் இலைமறை காயாக உள்ளன. இதனை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்திப் பயன்பெறுவோமாக.



"If there be righteousness in the heart,
There will be beauty in the character,
If there is beauty in the character,
There will be harmony in the home,
If there be harmony in the home,
There will be order in the nation,
If there is order in the nation,
There will be peace in the world"

Dr. APJ Abdul Kalam

ISBN 978-93-87009-32-5

**என்.ஜி.எம். கல்லூரி**

பொள்ளாச்சி